# கலைஞரின்பிறந்தநாள்; காலத்தின்சிறந்தநாள்!

கொஞ்சுகிளிக் கூட்டமும்
குயில்களின் விருந்திசையும்
நஞ்சைவயல் தோட்டமும்
நல்லாற்றுப் பாய்ச்சலும்
மஞ்ஞைகளின் ஆட்டமும்
மலர்ப்பூங்கா மணக்காற்றும்
வஞ்சமின்றிப் பெருகிய
வளவனாம் சோழனாண்ட
நெஞ்செலாம் களிப்பூட்டும்
நீர்பெருகி ஊர்செழிக்கும்
தஞ்சைவள நன்னிலத்துத்
தண்பொழில் திருக்குவளை
அஞ்சுகத்தாய் முத்துவேலர்
அருந்தவப் பேற்றினால்
செஞ்சுருட்டிப் பண்போலத்
திக்கெட்டும் புகழ்பரவ,
துஞ்சிருள் போக்கிடச்
சுடர்தரும் சூரியனாய்
நெஞ்சினிக்கப் பிறந்தவர்நீர்;
நினைத்தபடி
சிறந்தவர் நீர்!

திருக்குவளை பிறந்தாலும்
தேராலே பேர்பெற்ற
திருவாரூர் வளர்ந்தவர்நீர்;
சென்னையில்
உயர்ந்தவர்நீர்!
அரும்பிளஞ் சிறுவயதில்
அஞ்சாமல் இந்தியை
ஆகாதென்று ஊர்வலம்
தெருத்தோறும்
சென்றவர்;
சிறுவரணி கண்டவர்!
கருதியது முடிக்கின்ற
கட்டுறுதி கொண்டவர்!
வருநாளில் போராடும்
வல்லமைக்குச் சான்றிந்தத்
திருவாரூர் பெருமுழக்கம்;
தீயாகித் தருங்கலக்கம்!

ஒருநாளும் தூங்காமல்
உழைக்கின்ற
உம்வழக்கம்
தருகின்ற உயர்வுக்குத்
தக்கதோர்
அடையாளம்!

திண்ணார்ந்த கலைஞரே!
திராவிடம் தமிழென
வெண்ணார்ந்த சங்கொலித்தீர்,
வெகுண்டெழும்
முரசொலித்தீர்!
நண்ணாரும் உவக்கும்உம்
நயத்தகு பேச்செழுத்தில்
பெண்ணாறும்
வைகையும்
பெருகியெழும் காவிரியின்
தண்ணீராய் வேட்கையைத்
தணித்தவர்நீர்;
இனித்தவர்நீர்!

அண்ணா ஊன்றிய
அரியதொரு விதையின்று
விண்ணாகப் பரவியே
விரிநிழல் தருகின்ற
கண்ணான இயக்கமாம்
கழகத்தை இன்றுவரை
மண்ணாள வைப்பவர்நீர்;
மாற்றாரை வென்றுவென்று
மண்ணாக்கி விட்டவர்நீர்;
மாமுகடு தொட்டவர்நீர்!
பிண்ணாக்காய் எதிரிகளைப்
பிழிந்தெடுத்து இட்டவர்நீர்;

அண்ணாந்து பார்த்தாலோ
அகல்வானம் போலவே
எந்நாளும் தெரிபவர்நீர்;
இளங்கதிரும் வளர்நிலவும்
விண்ணார்ந்து ஒளிர்தல்போல்
வியப்பாகத் திகழ்பவர்நீர்;
புண்ணூர்ந்த ஆரியப்
போலிகளை
வெளுத்தெடுத் துப்
பண்ணார்ந்த தமிழ்நாட்டில்
பகுத்தறிவு தன்மானம்
கண்ணார்ந்து விளங்கவே
கலைஞரே இறுதிவரை
எண்ணார்ந்து
வாழ்ந்தவர்நீர்,
எழுத்தார்ந்து
வளர்ந்தவர்நீர்!



பேரறிஞர் அண்ணாவின்
பெருந்திறல் தம்பியாய்,
சீர்திருத்தப் பெரியாரின்
திண்ணிய மாணவனாய்
பேராசிரியர் என்றும்
பெரிதுவக்கும் நண்பனாய்,
பேரியக்கக் கழகத்தைப்
பேணிவளர் தலைவராய்,
போராளி தளபதியின்
புகழ்மிகு தந்தையாய்,
தேரியக்கும் பாகனாய்,
செந்தமிழ் நாட்டுக்குப்
பார்மெச்சும் முதல்வராய்,
பராசக்தி முதலான
ஊர்போற்றும் படங்களின்
உரையாடல் சிற்பியாய்,
தார்மாலை எப்போதும்
தாங்கிடும் தோளனாய்,
நேரத்தைப் போற்றிடும்
நெடும்பணிச் செயலராய்,
ஆரியத்தை வீழ்த்தியே
ஆண்டபெரும் நாயகனாய்,
காரியத்தை நிறைவேற்றும்
கடமைமிகு வீரனாய்,
ஒருள்ளத் தயாளம்மை
உடனுறை கணவராய்
நீருள்ளீர் , நிலைபெற்றீர்,
நெடும்புகழ் மிகவுற்றீர்!

அடர்காட்டில் என்றுமே
அரசாளும் அரிமாநீர்,
தொடர்வானில் எங்கெங்கும்
சுடர்கின்ற சூரியன்நீர்;
கடல்நீரில் எழுகின்ற
கட்டற்ற பேரலைநீர்,
உடல்உயிர் அளிக்கின்ற
உரிமைப்போர் வீரர்நீர்,
இடர்வரின் கலங்காமல்
எதிர்கொள்ளும்
இமயம்நீர்,
கடமையே கண்ணென்றீர்
காலமோ பொன்னென்றீர்,
கடமையும்
கண்ணியமும்
கட்டுப்பாடு எனமூன்றும்
உடைமையென்ற
அண்ணாவின்
ஒப்பற்ற தம்பிநீர்!

பெண்ணீர்மை போற்றியே
பெரும்புரட்சி செய்தவர்நீர்;
கண்ணீரைப் போக்காத
கடமையைத் தூண்டாத
வெண்ணீறும்
திருமண்ணும்
வித்தகம் குறைப்பதனை
எண்ணீரோ,
உண்மைவழி
எழுவீரே என்றாலும்
அண்ணா பெரியாரை
அன்றாடம் நினைவூட்டித்
தொண்ணூறு தாண்டியும்
துவளாமல் தீட்டினீர்,
கண்ணற்ற மக்களுக்குக்
கருத்துவழி காட்டினீர்!

ஈரத்தைக் கொண்டவராய்
இதயங்கள் வென்றவராய்,
பாரத்தைச் சுமந்தவராய்,
பணிமுடிக்கும்
தொண்டராய்
வீரத்தின் துணையோடு
விளங்கிய வித்தகராய்,
சூரத்தின் சூழ்ச்சியரைத்
துண்டாடும் வேலராய்,
ஆரத்தை அணிந்தவர்நீர்;
முத்தமிழ் அறிஞர்நீர்!

சேரன்போல் செழியன்போல்
திசையாண்ட சோழன்போல்
கூரறிவால் பெருந்திறனால்
கோலோச்சிக் கொற்றவனாய்ப்
பேர்பெற்று விளங்கும்உம்
பிறந்தநாள் என்றென்றும்
சீர்பெற்றுத் திகழுமே,
திசையெலாம் புகழுமே!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

கடல்நீரோ வற்றாது,
கார்முகிலோ குறையாது,
தொடர்காற்றோ நீங்காது,
சுழல்புவியோ நில்லாது,
அடர்வானம் நெகிழாது,
அழல்தீயும் குளிராது,
சுடர்மீனும் வீழாது,
சூரியனும் மறையாது
படர்வயல் எழுகின்ற
பசுமையும் போகாது,
மடல்வாழை இயல்பென்றும்
வளர்ந்தாலும் மாறாது!

தடமிட்டுச் சென்றவரே,
தளபதியைத் தந்தவரே,
உடன்பிறப்பைக் கொண்டவரே,
உரிமைப்போர் கண்டவரே,
கடனென்றும் விண்டவரே,
கனித்தமிழ் உண்டவரே,
அடலேறாய் முன்னேறி
அயராது வென்றவரே,
கடல்வான்மண் காற்றுநீர்
காலமெலாம் நிலைப்பதுபோல்
தொடல்இல்லா உயரத்தில்
தொடர்ந்துநீர் விளங்குவீர்!

கலைஞரெனின்
உழைப்பென்று
காலந்தான் சொல்கிறது,
கலைஞரெனின் உறுதியென்று
காலந்தான் கரைகிறது,
கலைஞரெனின் உரிமையென்று
காலந்தான் உரைக்கிறது,
கலைஞரெனின் உயர்வென்று
காலந்தான் பகர்கிறது,
கலைஞரெனின்
கொள்கையென்று
காலந்தான் புகல்கிறது,
கலைஞரெனின்
வெல்கையென்று
காலந்தான் வியக்கிறது,
கலைஞரெனின்
தலைமையென்று
காலந்தான் புகழ்கிறது,
கலைஞரெனின் புலமையென்று
காலந்தான் புனைகிறது,
கலைஞரெனின் இளமையென்று
காலந்தான் நுவல்கிறது,
கலைஞரெனின்
புதுமையென்று
காலந்தான் களிக்கிறது,
கலைஞரெனின் விரைவென்று
காலந்தான் நவில்கிறது!

மலைகுலைந்து போனாலும்
மனங்குலையா உறுதியர்,
வலைபல விரித்தாலும்
மயங்காத உளத்தினர்,
இலைபல கிளைத்தாலும்
எதிர்கொள்ளும் உரத்தினர்,
அலையெழுந்து ஆர்த்தாலும்
அடக்கியெழும் உயர்வினர்,
கலைஞரின் பிறந்தநாள்
காலத்தின் சிறந்தநாள்!

---

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ - வே.ராஜன் - ரமணி மாதவன் பங்கேற்பு!

## மதுரவாயல் 147 வது வட்டத்தில் கழகக் கொடி ஏற்றி - அறுசுவை உணவு - நலஉதவிகள்!

### மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் வேண்டுகோள்!

சென்னை, ஜூன். 3 -

மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்டத்தில் முத்தமிழ் அறிஞர் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (03.06.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 7 மணி அளவில், ஆலப்பாக்கம் நார்ச் சந்தியில் மாவட்டக் கழகப் பிரதிநிதி பிருந்தாவனம் ஏற்பாட்டில் கழகக் கொடி ஏற்றி 500 நபர்களுக்கு உணவு மற்றும் இனிப்பு வழங்குதல்,

காலை 7.30 மணி அளவில் அஷ்டலஷ்மி நகர் போலீஸ் பூத் அருகில் பகுதிப் பிரதிநிதி டி.ஜெயமுருகன் ஏற்பாட்டில் கழகக் கொடி ஏற்றி 500 நபர்களுக்கு உணவு வழங்குதல்,

காலை 8 மணி அளவில் கிருஷ்ணா நகர், 4 வது தெருவில் 147 வது வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.மணி ஏற்பாட்டில் 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

காலை 8.30 மணி அளவில் திடீர் நகர் பெருமாள் கோவில் அருகில் 147 வது வட்ட துணைச் செயலாளர் ஜி.பி. ஆனந்தகுமார் ஏற்பாட்டில் 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. காலை 9 மணிக்கு வட்ட துணைச் செயலாளர் தமயந்தி இளங்கோவன் ஏற்பாட்டில் கழகக் கொடி ஏற்றி 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

9.30 மணி அளவில் கலை இலக்கிய அணி பகுதி அமைப்பாளர் வி.வெங்கடேசன் ஏற்பாட்டில் மேட்டுக்குப்பம் கங்கையம்மன் கோவில் அருகில் கழகக் கொடி ஏற்றி பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் மற்றும் இனிப்பு வழங்கப்படுகிறது.

காலை 10 மணி அளவில் கங்கா நகரில் கழகக் கொடி ஏற்றி 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு மதுரவாயல் வடக்கு பகுதி மாணவரணி அமைப்பாளர் மனோஜ் மாதவன் ஏற்பாட்டில் வழங்கப்படுகிறது.

மதியம் 11:30 மணி அளவில் ஆலப்பாக்கம் பிருந்தாவனம் முதியோர் காப்பகத்தில் 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் உணவு வழங்குகிறார்.

அனைத்து நிகழ்ச்சிகளிலும் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, மதுரவாயல் வடக்கு பகுதிச் செயலாளர், 11 வது மண்டலக்குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

ஆகவே வட்டத்திற்கு உட்பட்ட மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளில் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு 147 வது வட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

அமைச்சர் மா.சுப்பிரமணியன் – இரா.துரைராஜ் பங்கேற்பு

## சைதை கிழக்கு பகுதி 170"அ"வட்டத்தில், 22 இடங்களில் கலைஞர் பிறந்த நாள் நிகழ்ச்சிகள்!

### கோட்டூர் கோ.சண்முகம் அறிக்கை

சென்னை, ஜூன் 3 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு ஜூன் : 03:06:2025, செவ்வாய்க்கிழமை, முத்தமிழ் அறிஞர் கலைஞர்,அவர்களின் 102,வது பிறந்த நாள் விழா 170"அ" வட்ட கழகம் சார்பில் கோட்டூர் கோ. சண்முகம் தலைமையில் பள்ளிப்பட்டு சேவா சமாஜ காப்பகத்தில் பயிலும் பள்ளி மாணவமாணவிகளுக்கு அசைவ அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

மாவட்டச் செயலாளர். அமைச்சர் மா. சுப்பிரமணியன், மண்டல குழு தலைவருமான இரா.துரைராஜ் ஆகியோர் கலந்து கொண்டு மாணவ மாணவியர்களுக்கு அறுசுவை உணவு வழங்குகிறார்கள்.

மற்றும் 170"அ" வட்ட கழகம் சார்பில் கோட்டூர் கோ. சண்முகம் அவர்கள் முன்னிலையில் பல்வேறு தெருக்களில் முத்தமிழ் அறிஞருக்கு பிறந்த நாள் நிகழ்ச்சிகள் இன்று ( 03-06.2025 செவ்வாய் கிழமை) பகுதி துணை செயலாளர் ஆர். ராஜ்குமார் தலைமையில் பள்ளிப்பட்டு சேவாசமாஜ காப்பகத்தில் பயிலும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு காலை 7.50 மணிக்கு சிற்றூண்டி வழங்கும் நிகழ்ச்சி கழிக்குன்றம் பிள்ளையார் கோவில் தெரு கலிக்குன்றம் அம்பேத்கார் சிலை அருகில்

ஸ்ரீராம் நகர் பள்ளிப்பட்டு சாலையில் கழக கொடியேற்றி காலை உணவு வழங்கும் நிகழ்ச்சி. அறிஞர் அண்ணா தெருவில் R.S ஸ்ரீதர் சாலை IOB வங்கி அருகில் C.ரவி ,E.முரளி, S.ராஜா குமார் வே.முருகன் ஆகியோர் ஏற்பாட்டில் காலை 8.35 மணிக்கு கழக கொடியேற்றி சிற்றுண்டி வழங்கும் நிகழ்ச்சி. மேற்கு கால்வாய் கரை சாலைA,பிளாக் அருகில் மேற்கு கால்வாய் கரை சாலை பகுதியில் கோட்டூர் மண்டப சாலை கோட்டூர் பெருமாள் கோவில் தெரு பாரதியாவின் மாந்தோப்பு பகுதி கழக கொடி ஏற்றி கேக் வெட்டி பொதுமக்களுக்கு சிற்றுண்டி வழங்கப்படும்!

பொன்னியம்மன் கோயில் தெரு எல்லையம்மன் கோயில் தெரு குருவப்பன் தெரு கோட்டூர் பீலியம்மன் கோவில் தெரு மேற்கு கால்வாய் கரை சாலை பகுதி மேற்கு கால்வாய் கரை சாலை G. H பிளாக், பகுதி மண்டபம் தெரு ஏரிக் கரை சாலை சந்திப், அங்காளம்மன் கோவில் பகுதியில் பகுதி N. S. K.சிலை அருகில் கோட்டூர் திருவள்ளுவர் நகர் மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் பகுதி செயலாளரும் 13 வது மண்டல குழு தலைவரும் இரா.துரைராஜ் mc அவர்கள் கலந்துக்கொள்கிறார்

எனவே 170 "அ" வட்டத்தில் உள்ள பகுதி நிர்வாகிகள், மாவட்டபிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள் அணிகளின் மாவட்ட மற்றும் பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணியினர், தகவல்தொழில் நுட்ப அணி பாக ஒறுங்கிணைப்பாளர்கள் ,BLA2, பாக முகவர்கள், மகளிர் அணியினர் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று வட்டச் செயலாளர் கோட்டூர் கோ.சண்முகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

# காலம் வென்று வாழும் கலைஞர் தெய்வம்! கழகம் கோயில்!!



**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்.** (திருக்குறள் 50)

**த**ந்தைபெரி யார்காலம் தொட்டு, இன்றும்
தமிழ்தமிழர் அடிமையாகா உரிமை வேட்கை
செந்தமிழ்நம் தாய்மொழிக்கும் தாய்மண் ணிற்கும்
தகுதகைமை வழிகாணும் செயலின் ஆக்கம்
முந்திஎழும் வகைவாகை தேடிச் சூடி
முத்தமிழும் வளர்கின்றது என்றால் அந்த
விந்தைதி முகழகத்தைக் காலம் காத்த
வினைதிட்பக் கோக்கலைஞர் வினையால் அன்றோ!

தாய்மண்ணைத் தமிழ்மொழியை மேம்படுத்தித்
தமிழ்நாடு பெயர்சூட்டி மறைந்தார் அண்ணா!
ஆய்ந்தபெரும் மொழிக்களப்போர் மீண்டு வெற்றி
அறிஞரண்ணா கைதந்த தமிழர் நாட்டை
தோய்ந்துதோய்ந்து அடிநாட்கள் தொட்டு, தன்னின்
துடிப்புணர்ச்சி வேகத்தால் ஈகத் தாலே
வாய்த்தபெரும் தலைமையினால் என்றென் றைக்கும்
வாழும் தி மு.கழகமாகக் கலைஞர் கண்டார்!

சோதனைகள் ஒன்றிரண்டா எத்த னையோ
துன்பக்கடல் நீந்திநீந்திப் பயிற்சி பெற்று
வேதனைகள் சுடந்துகரை யேறும் ஈடில்
வெற்றிகுவி அற்புதத்தால் கலைஞர் கோமான்
போதனைகள் நீதிக்கட்சி பெரியார் அண்ணா
புடம்போட்ட கருத்துவழிப் போராட் டத்தால்
சாதனைகள் ஆட்சிகண்டார் மீண்டும் சூழ்ச்சி
தமைபன்னி ரெண்டாண்டுகடந் தேவென்றாரே!

இடைப்பட்ட ஆட்சிவாராக் காலம் தன்னில்
இரண்டகத்தார் தந்தகொடுங் கோலின் வஞ்சத்
தடைகளினை அமைதிவழி தகர்த்தெ றிந்தார்
சாகாத வரம்பெற்றார் சரித்தி ரத்தில்
நடைகள்தடு மாறுநடுவ ணரசிற் கும்தான்
நன்றுசெங்கோல் சமநீதி தந்து காத்தார்
கொடைகோடி கோடிகொடுத் தாலும் நம்மின்
கொள்கைக்கோ கலைஞர்க்கே ஈடா காதே!

வானத்தின் விண்மீன்கள் தனைத்தி ரட்டி
மாலைபுனைந் தேகலைஞர் கழுத்தில் சூட்டி
தானத்தின் கதிர்மதியின் ஒளிவெள் ளங்கள்
தனைஒன்றாய்க் குவித்துமணி மகுடம் மாக்கி
மானத்தின் தலைமகன்நம் கலைஞ ருக்கே
மரியாதை நன்றிதனைக் கூறி னாலும்
ஆனதி மு.கழகத்தை மீட்டுத் தந்தே
அறம்காத்த மோனத்திற்(கு) ஈடா காதே!

பொறுமைக்கே இலக்கணம்யார்? கலைஞ ரேதான்
பொறாமைபுதைத் தெழுகலைஞர் புனிதர் அன்றோ?
சிறுமைகண்டு பொங்கிஅழி அரிமா அண்ணல்
சித்தர்களுக் கெலாம்கலைஞர் சித்தர் கோவே!
வறுமைப்பிணி தமிழ்நாட்டில் வாரா வண்ணம்
மாண்பாட்சி வித்தகர்கோ கலைஞ ரேதான்
உறுதியிலும் உறுதிநெஞ்சத் துணிவால் மீட்சி(நம்)
உரிமைகளுக்(கு) அடித்தளமாய் அமைக லைஞர்!

இன்னும் ஓர் நூற்றாண்டும் இருப்பார் என்றே
எண்ணியேநம் தமிழரெல்லாம் மகிழும் போதில்
தன்னேரில் மகன் இஸ்டாலின் தனக்கா சானாய்த்
தமிழ்நாட்டின் மாத்தலைமைத் தகுதி தந்து
மன்னாத பெருமைமெரினாக் கடற்க ரையில்
மகன் தந்தைக்(கு) ஆற்றுதவி யாக வாரி
நன்றலைகள் காலமெலாம் வாழ்த்தும் தந்தை
நாடெல்லாம் வணங்க இஸ்டாலின் அருமை செய்தார்

ஓயாத தேனூற்றின் வருகை யைப்போல்
உயிர்காக்கும் மருந்துமர வளர்ச்சி யைப்போல்
சேயாகத் தமிழர்தம் தலைமு றைகள்
செந்தமிழர் பரம்பரைகள் போற்று மாறு
வாயார மனமார தமிழ்மக் கள்தாம்
வாழ்த்தமகன் உன்னதத்தின் ஆட்சிப் போற்றத்
தாயாகத் தந்ததமிழ்க்கோ கலைஞர் தெய்வம்!
தமிழரெல்லாம் தலைவணங்கும் கழகம் கோயில்!

கலைஞரைப்போல் ஒருதலைவர் உலக ரங்கில்
காணுவதோ அரிதாமவர் தமிழர் ஈதால்
நிலைஉலகம் உண்மைஅறி யாதல் கூடும்
நெடிதுபுகழ்க் கிலக்கான சமத்து வத்தின்
உலைகொதிக்கும் ஆக்கமுறைஎல் லோர்க்கும் எல்லாம்
உரிமைகிடைக் கின்றவகை செய்நம் முதல்வர்!
தலைமைக்கும் தலைமை யாம்நம் தலைவ ராலே
தமிழ்க்கோவாம் கலைஞர்புகழ் உலகே போற்றும்!



பெருங்கவிக்கோ **வா.மு.சேதுராமன்**
(உலக அமைப்பாளர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்)

---

க.கோவிந்தராஜ் தலைமை! மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி சி.பி.திருமலை முன்னிலை!

## அண்ணா நகர் 101 வது வட்டத்தில் 1000 நபருக்கு நல உதவி அறுசுவை உணவு!

### நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எம்.கே.மோகன் - ச.பரமசிவம் - கார்த்திக் மோகன் பங்கேற்பு!

சென்னை, ஜூன். 03

சென்னை 101 வது வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமையில் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் விழா இன்று (3.6.2025 செவ்வாய்க்கிழமை) காலை 8 மணி அளவில் வட்டக் கழகத்தில் உள்ள பல்வேறு இடங்களில் நடைபெறுகிறது.

101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டக் கழக செயலாளர் சி.பி.திருமலை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதிகளை செயலாளர் ச பரமசிவம் கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் கலந்து கொண்டு கழகக் கொடி ஏற்றி, நலத்திட்ட உதவிகள், அறுசுவை உணவு வழங்குகின்றனர்.

இதில் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

---

## 100வது வட்டத்தில் கலைஞர் பிறந்த நாள் உணவு வழங்கல்!

### கு.பாபு தலைமை - நே.சிற்றரசு பங்கேற்பு!

சென்னை, ஜூன்.3–

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு தலைவர் கலைஞர் அவர்களின் உருவ படசத்திற்கு மலர்தூவி மரியாதை செய்தல் பின்பு 300 நபர்களுக்கு காலை சிற்றூண்டி வழங்குதல் இன்று (03.06.2025) காலை 08.00 மணியளவில் டி.பி.சத்திரம் கிளை கழகம் அருகில் நடைபெறுகிறது. தலைமை : கு.பாபு (100வது (அ) வட்ட செயலாளர் திமுக)

முன்னிலை : இரா.வேல்முருகன் மா.பி., பி.வின்ஜாஸ் டாலின் (மா.பி)., டி.ஜான் (அ.த), மோ.லிங்கேசன் (து.செ), வி.சுரேஷ் (து.செ), பி.கீதா (து.செ), என். ராஜன் (வ.பொ) வரவேற்புரை : ஜி.சாமிநாதன் (ப.பி), மு.கதிரவன் (ப.பி), சி.ரகுராமன் (ப.பி), ஏபிஎம். சாம்சன் (ப.பி), பவாணி வெங்கடேசன் (ப.பி), கழக தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அன்பு வேண்டுகோளுக்கு இனங்க முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பிறந்தநாளாக ஜூன் 3 ஆம் நாளை செம்மொழி நாளாக நாடெங்கும் கொண்டாடுவோம்.

சென்னை மேற்கு மாவட்டம் கழக செயலாளர் பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் குழு தலைவர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் எம்.பி., அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன் எம்.எல்.ஏ., அண்ணா நகர் வடக்கு பகுதிசெயலாளர் ச.பரமசிவம், மாநில தகவல் தொழில்நுட்ப துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், 100 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வசந்தி பரமசிவம் எம்.சி., மாவட்ட / பகுதி / வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2, BLC, மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள், உள்ளிட்டோர் திரளாக கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

---

அண்ணாநகர் வடக்கு பகுதி

## 101 வது வட்டக் கழக நிர்வாகி ஜெ.பாபு மறைவு! கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, ஜூன். 3

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டச் செயற்குழு உறுப்பினர், 80 வது பாக முகவர்கள் ஜெ.பாபு நேற்று (2.6.2025 திங்கட்கிழமை) இயற்கை ஏய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, தயாநிதி மாறன் எம்.பி., எம்.கே. மோகன் எம்.எல்.ஏ., வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 வது வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (3.6.2025 செவ்வாய்க்கிழமை) 152/1, ஆர். வி.நகர், அண்ணா நகர் கிழக்கு, சென்னை 102, அன்னாரின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்படுகிறது.